# பெரியாழ்வார் திருமொழி 1-5
## உய்ய உலகு
(தலையை நிமிர்த்து முகத்தை அசைத்து ஆடுதல்: செங்கீரைப் பருவம்)

64 * உய்ய உலகு படைத்துண்ட மணி வயிறா *
ஊழிதோறூழி பல ஆலினிலை அதன்மேல் *
பைய உயோகு துயில் கொண்ட பரம்பரனே *
பங்கய நீள்நயனத்து அஞ்சன மேனியனே **
செய்யவள் நின்னகலம் சேமமெனக் கருதிச் *
செல்வுபொலி மகரக் காது திகழ்ந்திலக *
ஐய எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (1)

65 கோளரியின் உருவம் கொண்டு அவுணனுடலம் *
குருதி குழம்பியெழக் கூருகிரால் குடைவாய் *
மீள அவன் மகனை மெய்ம்மை கொளக் கருதி *
மேலை அமரர் பதிமிக்கு வெகுண்டுவர **
காள நன்மேகமவை கல்லொடுகால் பொழியக் *
கருதிவரைக் குடையாக் காலிகள் காப்பவனே *
ஆள எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (2)

66 நம்முடை நாயகனே நான்மறையின் பொருளே *
நாவியுள் நற்கமல நான்முகனுக்கொருகால் *
தம்மனை ஆனவனே தரணி தல முழுதும் *
தாரகை இன்னுலகும் தடவி அதன் புறமும் **
விம்ம வளர்ந்தவனே வேழமும் ஏழ்விடையும் *
விரவிய வேலைதனுள் வென்று வருமவனே *
அம்ம எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (3)

67 வானவர் தாம் மகிழ வன்சகடம் உருள *
வஞ்ச முலைப் பேயின் நஞ்சமது உண்டவனே *
கானக வல்விளவின் காயுதிரக் கருதிக் *
கன்றது கொண்டெறியும் கருநிற என் கன்றே **
தேனுகனும் முரனும் திண்திறல் வெந்நரகன் *
என்பவர் தாம் மடியச் செருவதிரச் செல்லும் *
ஆனை எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (4)

68 மத்தளவும் தயிரும் வார்குழல் நன்மடவார் *
வைத்தன நெய்களவால் வாரிவிழுங்கி * ஒருங்கு
ஒத்த இணை மருதம் உன்னிய வந்தவரை *
ஊருகரத்தினொடும் உந்திய வெந்திறலோய் **
முத்தின் இளமுறுவல் முற்ற வருவதன் முன் *
முன்ன முகத்தணியார் மொய்குழல்கள் அலைய *
அத்த எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (5)

69 காயமலர் நிறவா கருமுகில் போலுருவா *
கானக மாமடுவில் காளியன் உச்சியிலே *
தூயநடம் பயிலும் சுந்தர என் சிறுவா *
துங்க மதக் கரியின் கொம்பு பறித்தவனே **
ஆயமறிந்து பொருவான் எதிர்வந்த மல்லை *
அந்தரமின்றி அழித்தாடிய தாளிணையாய் *
ஆய எனக்கு ஒருகால் ஆடுக செங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (6)

70 துப்புடை ஆயர்கள் தம்சொல் வழுவாது ஒருகால் *
தூய கருங்குழல் நல்தோகை மயில் அனைய *
நப்பினை தன்திறமா நல்விடை ஏழவிய *
நல்ல திறலுடைய நாதனும் ஆனவனே **
தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத் *
தனியொரு தேர் கடவித் தாயொடு கூட்டிய * என்
அப்ப எனக்கு ஒருகால் ஆடுகசெங்கீரை *
ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே (7)

71 * உன்னையும் ஒக்கலையில் கொண்டு தமில்மருவி *
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்து வரும் *
கன்னியரும் மகிழக் கண்டவர் கண் குளிரக் *
கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கு அருளி **
மன்னு குறுங்குடியாய் வெள்ளறையாய் மதிள்சூழ் *
சோலைமலைக்கரசே கண்ணபுரத்தமுதே *
என் அவலம் களைவாய் ஆடுக செங்கீரை*
ஏழுலகும் உடையாய் ஆடுக ஆடுகவே (8)

72 பாலொடு நெய்தயிர் ஒண் சாந்தொடு சண்பகமும் *
பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறிவர *
கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக் *

கோமள வெள்ளி முளைப்போல் சில பல்லிலக **
நீல நிறத்தழகார் ஐம்படையின் நடுவே *
நின் கனி வாயமுதம் இற்று முறிந்து விழ *
ஏலுமறைப் பொருளே ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய் ஆடுக ஆடுகவே (9)

73 செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில் *
சேர்திகழ் ஆழிகளும் கிண்கிணியும் * அரையில்
தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் *
பூவொடு பொன்மணியும் மோதிரமும் கிறியும் **
மங்கல ஐம்படையும் தோல்வளையும் குழையும் *
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக *
எங்கள் குடிக்கரசே ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய் ஆடுக ஆடுகவே (10)

74 * அன்னமும் மீனுருவும் ஆளரியும் குறளும் *
ஆமையும் ஆனவனே ஆயர்கள் நாயகனே *
என் அவலம் களைவாய் ஆடுக செங்கீரை *
ஏழுலகும் உடையாய் ஆடுக ஆடுகவென்று **
அன்னநடை மடவாள் அசோதை உகந்த பரிசு *
ஆனபுகழ்ப் புதுவைப் பட்டன் உரைத்த தமிழ் *
இன்னிசை மாலைகள் இப்பத்தும் வல்லார் * உலகில்
எண்திசையும் புகழ் மிக்கு இன்பமதெய்துவரே (11)